

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், மாங்காடு நகர தி.மு.க. சார்பில் நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா தலைமையில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அருகில் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், பொது குழு உறுப்பினர் எம்.ஆர்.சீனிவாசன் மற்றும் நகர கழக நிர்வாகிகள் உள்ளனர்



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (05.09.2024) , மடுவின்கரை சென்னை மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் லார்சன் அன்ட் டூப்ரோ (Larsen & Toubro) லிமிடெட் நிறுவனத்தின் பெருநிறுவன சமூக பங்களிப்பு நிதியில் ரூ.1.50 கோடி மதிப்பில் பெருநகர சென்னை மாநகராட்சியின் 8 சென்னை பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட 1650 மேசை மற்றும் இருக்கைகளை பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி.அமித், மண்டலக்குழுத் தலைவர் ஆர்.துரைராஜ், மாமன்ற உறுப்பினர் தா. மோகன்குமார், லார்சன் அன்ட் டூப்ரோ லிமிடெட் நிறுவனத்தின் துணை பொது மேலாளர் ஆர்.ராஜசேகர பாண்டி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


# ‘மாணவர்களைப் பணயக் கைதிகள் ஆக்காதீர்கள்!’

## ஒன்றிய அரசுக்கு ‘ஆனந்தவிகடன்’ தலையங்கத்தில் கண்டனம்!

புதிய கல்விக்கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள பி.எம்.ஸ்ரீ பள்ளிகளை ஏற்றுக்கொள்ளாததால் தமிழகத்துக்குத் தரவேண்டிய ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்திட்ட நிதியை நிறுத்தி வைத்திருக்கும் மத்திய அரசின் முடிவு கண்டிக்கத்தக்கது.

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களைப் பல்வேறு வகையில் ஒன்றிய அரசு தொடர்ந்து வஞ்சித்து வருகிறது. பெருமழைப் பேரிடரின்போது தமிழகம் கோரிய நிதியைத் தராமல் இறுக்கம் காட்டியவர்கள், இப்போது தங்கள் கொள்கையை ஏற்றுக்கொள்ளாததால் கல்விக்கான நிதியை மறுத்திருக்கிறார்கள். ஒன்றிய அரசின் இந்தச் செயல் தமிழகத்தில் செயல்படும் 37,554 அரசுப்பள்ளிகளில் படிக்கும் 53 லட்சம் மாணவர்களையும் 2.25 லட்சம் ஆசிரியர்களையும் கடுமையாக பாதிக்கும்.

1993-ல் கொண்டு வரப்பட்ட இடைநிலைக் கல்வித்திட்டத்தை, 2001-ல் பிரதமராக இருந்த வாஜ்பாய் ‘அனைவருக்கும் கல்வித் திட்ட’மாக மாற்றினார். அதன்மூலம் மாநிலங்களுக்குக் கணிசமான நிதி ஒன்றிய அரசால் பகிர்ந்தளிக்கப்பட்டது. மாநிலங்களின் கல்வி வளர்ச்சிக்கு அத்திட்டம் சிறந்த பங்களிப்பை வழங்கியது. 2018-ல் அந்தத் திட்டத்தை ‘ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித்திட்டம்’ என்று பெயர் மாற்றிய ஒன்றிய அரசு, நிதியைக் கணிசமாகக் குறைத்தது. அதன் உச்சமாக தற்போது தங்கள் கொள்கையைத் திணிக்கும் கருவியாக அதைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளது.



கல்வி போன்ற பொதுப் பட்டியலில் இருக்கும் ஒரு துறையில் ஒன்றிய, மாநில அரசுகள் பரஸ்பரப் புரிதலோடு செயல்படவேண்டும். கொள்கை ரீதியான விருப்பு வெறுப்புகளைத் தவிர்த்து, மக்களின் நலனை முன்வைத்தே முடிவுகளை எடுக்கவேண்டும். பி.எம்.ஸ்ரீ திட்டத்தைத் தமிழகம் மட்டுமன்றி, மேற்கு வங்காளம், டெல்லி, கேரளா, பஞ்சாப் போன்ற மாநிலங்களும் ஏற்கவில்லை.

இதைக் காரணம் காட்டி, தமிழகத்துக்கு கடந்த ஆண்டு வழங்கவேண்டிய ரூ.249 கோடியையும், இந்த ஆண்டு ஜூனில் வழங்கவேண்டிய ரூ.573 கோடியையும் வழங்க மறுத்திருக்கிறது ஒன்றிய அரசு. கல்வி உரிமைச் சட்டப்படி தனியார் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்குக் கல்விக்கட்டணம் செலுத்துவதும், ஆசிரியர்களுக்குச் சம்பளம் மற்றும் பயிற்சிகள் வழங்குவதும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது.

புதிய கல்விக்கொள்கையை எல்லா மாநிலங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஒன்றிய அரசு விரும்பினால் அது தொடர்பாக மாநில அரசுகளோடு பேச்சுவார்த்தை நடத்தலாம். பரஸ்பர கருத்துப் பகிர்தல் மூலமாக ஒருமித்த முடிவை எட்டலாம். அதை விடுத்து, ஒட்டுமொத்த மாணவர்களையும் பணயக் கைதிகள் போல மாற்றியும் அச்சுறுத்தியும், அந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்தி ப்பது நியாயமல்ல. இது மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

இந்த ஆண்டு பட்ஜெட்டில் 1,245 பள்ளிகளை மட்டுமே நடத்தும் கேந்திரிய வித்யாலயாவுக்கு ரூ.8,364 கோடியை ஒதுக்கியுள்ள ஒன்றிய அரசு, இந்தியா முழுவதுமுள்ள 14 லட்சம் பள்ளிக்கூடங்களுக்கான சமக்ர சிக்ஷா திட்டத்துக்கு ரூ.37,500 கோடி மட்டுமே ஒதுக்கியிருக்கிறது. அதையும் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு தகுந்த நேரத்தில் தராமல் இழுத்தடிப்பது கண்டிக்கத்தக்கது.

இந்தியாவில் அதிக வரி வருவாய் தரும் மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. அரசியல் காரணங்களுக்காக இந்த மாநிலத்தை வஞ்சிப்பது தவறான முன்னுதாரணம். ஒன்றிய அரசு நிபந்தனை யின்றி தமிழகத்துக்கான நிதியை விடுவிக்க வேண்டும்.

**நன்றி:**
**‘ஆனந்த விகடன்’**
**11.9.2024**

# வேலூர் மாவட்டம் - காட்பாடியில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## பொதுச் செயலாளர்-அமைச்சர் துரைமுருகன் பங்கேற்கிறார்!

வேலூர், செப்.6-

வேலூர் மாவட்டம் காட்பாடி மேற்கு ஒன்றிய கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 8ந்தேதி காட்பாடி சித்தூர் பஸ் ஸ்டாண்ட் அருகில் உள்ள நாராயணா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்துக்கு மேற்கு ஒன்றியஅவை தலைவர் எம்.எஸ். ராஜா தலைமை தாங்குகிறார். காட்பாடி மேற்கு செயலாளர் கழக செயலாளர் எஸ். தணிகாசலம் அனைவரையும் வரவேற்று பேசுகிறார். ஒன்றிய துணை செயலாளர் கே.எஸ். கார்த்திகேயன், காந்திமதி பத்மநாபன், கே.பஞ்சநாதன் ஒன்றிய பொருளாளர் ஜி.சண்முகம், மாவட்ட பிரதிநிதிகள்

எஸ். முருகேசன், வி. மோகன், எம்.பட்டாபிராமன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

நிகழ்ச்சியில் கழகப்பொதுச் செயலாளரும் , நீர்வளம் மற்றும் கனிம வளம் சுரங்கத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்.

அரக்கோணம் நாடாளு மன்ற உறுப்பினர்

எஸ். ஜெகத்ரட்சகன் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாவட்ட அவை தலைவர் தி.அ.முகமதுசகி, மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், புலவர் துரைசிங்காரம்,

பொதுக்குழு உறுப்பினர் வி.தயாநிதி, உமாபதி காட்பாடி ஒன்றிய குழு தலைவர் வி.வேல்முருகன் , துணைத்தலைவர் எஸ்.சரவணன், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கருணாகரன், சி.இரவி, ஏ.கே.முருகன், மாவட்ட இந்து சமய அறநிலையத் துறை தலைவர் நா.அசோகன் , பகுதி கழக செயலாளர்கள் ஜி.வன்னிய ராஜ்,எம்.சுனில் குமார், என். பரமசிவம், பி.முருக பெருமாள், தலைமை கழக பேச்சாளர் கென்னடி, கே.நேரு, மண்டல குழுத லைவர் புஷ்பலதா, எஸ். ராஜேந்திரன், பிரம்மபுரம்பழனி, 7வதுவட்டகழக செயலாளர் பி.லோகநாதன், கோரந்தாங்கல் குமார், ஜி.லோகநாதன், பூஞ்சோலை சீனிவாசன், மாநகர அவைத் தலைவர்

சூரி என்ற கோவிந்தன் , எம்.சாந்தகுமார், கே.ஏ.கண்ணன், மாவட்ட வழக்கறிஞர் அணி மு.பார்த்தீபன், மாவட்ட ஊராட்சிகுழு உறுப்பினர் சுலோச்சனா கிருபாகரன், வி.கிருபா கரன், டீட்டாசரவணன், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

### சிவகங்கை மாவட்டத்திற்கு 10-அன்று வருகை தரும்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை,செப்.6

சிவகங்கை மாவட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற 10 ம் தேதி சுற்றுப் பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளார். அவரது சுற்றுப் பயண நிகழ்ச்சிகள் விவரம் வருமாறு:-

10ம் தேதிசெவ்வாய்கிழமை காலை 10.00 மணி . சிவகங்கை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் முதல்வரின் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தல் . காலை.10.30 மணி. சிவ



கங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக அரங்கில் மாவட்ட அளவில் நடைபெற்று வரும் அரசு திட்டப்பணிகள் குறித்து ஆய்வு .பகல்.1.00 மணி காளையார் கோவில்தாலுகா நகரம்பட்டியில் நடைபெற்று வரும் சுதந்திர போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் நினைவு மண்டபம் கட்டிடப் பணிகள் குறித்து ஆய்வு. அதனைத் தொடர்ந்து சிறாவயலில் நடைபெற்று வரும் அண்ணல் காந்தி ஜீவா நினைவு மண்டபம் கட்டிடப் பணிகள் ஆய்வு. மாலை 4:30 மணி.காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வளாக அரங்கில் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல். மாலை6.00 மணி. கீழடி அருங்காட்சியகம் பார்வையிடுதல். இரவு மதுரை தங்குதல் . முன்னதாக காலை 9.00மணி. அளவில் மதுரையி. லிருந்து கார் மூலம் வருகைதரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு. மாவட்ட எல்கையான பூவந்தியில் சிவகங்கை மாவட்ட தி.மு.க.சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படு. கிறது.

இத்தகவலை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தெரிவித் துள்ளார்.

### எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. பங்கேற்பு! சோழிங்கநல்லூர் மேற்குப் பகுதி கழகப் பிரதிநிதி

# மடிப்பாக்கம் சி.நூக்கப்பிள்ளை - என்.கிரிஜா இல்லத் திருமண வரவேற்பு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் – என்.ஆர்.இளங்கோ எம்.பி. – தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி.வாழ்த்துரை!

சென்னை, செப். 6-

சோழிங்கநல்லூர் மேற்குப் பகுதி கழகப் பிரதிநிதி மடிப்பாக்கம் வழக்கறிஞர் சி.நூக்கப்பிள்ளை - என்.கிரிஜா இணையரின் புதல்வி என். நிவேதா - ஏ.ராஜ்குமார் ஆகியோரது திருமண வரவேற்பு விழா இன்று (6.9.2024 - வெள்ளி) மாலை 6 மணியளவில் கோவிலம்பாக்கம் ஜெ. டி.பிரேமாவதி திருமண மஹாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன், என்.ஆர்.இளங்கோ



எம்.பி., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இதில் ஏ.எம்.வி.பிரபா கர்ராஜா எம்.எல்.ஏ., துணை மேயர் மு.மகேஷ் குமார், பெருங்குடி, எஸ்.வி.ரவிச்சந்திரன், பாலவாக்கம் க.சோமு, பாலவாக்கம், த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், வி.இ.மதியழகன், ஜி.கே.ரவி, ஜி.வெங்கடேசன், எம். கே.எழுமலை, எஸ்.ஏ.ஹரிகிருஷ்ணன், வி.எட்டியப்பன், விஜயபாலன், கே.எஸ்.ரவிச்சந்திரன், கே.சந்துரு, ஜெ.பச்சையப்பன், கே.ஜெ.சரவணன், ஜெகதீசன் மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக செயல்வீரர்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில், மடிப்பாக்கம் எம்.கே. ஜெய், ஷெர்லி ஜெய் எம்.சி., எம்.கே.ராமகிருஷ்ணன், ஆர். மகாலிங்கம், அ.ஈஸ்வரமூர்த்தி, எஸ்.ஹரிஹரன், பி.ரமேஷ், கே.தேவிகமல், என்.ஆர்.சீனிவாசன், ஆர்.தயாளன், என்.வி.ஆனந்தகுமார், எம்.நிதிராஜ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் - பாலவாக்கம் தா.விஸ்வநாதன் சிறப்புரை!

# வேளச்சேரி கிழக்குப் பகுதி 173வது வட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் மு. தனசேகரன் தலைமை! பகுதி செயலாளர் துரை கபிலன் முன்னிலை!

சென்னை, செப். 6-

சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி கிழக்குப்பகுதி 173 வது வட்டத்தில் கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை தெற்கு மாவட்ட கழகத்தின் செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சுப்பிரமணியன் அறிவுருத்தளின் பேரில் வட்டக் கழகத்தின் செயலாளர் மு. தனசேகரன் தலைமையில் அடையார் காந்தி நகர் கெனால் பேங்க் ரோடு செயின்ட் லூயிஸ் சர்ச் மண்டபத்தில் இன்று (06.09.2024) மாலை 5:00 மணி அளவில் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் பகுதி கழகத்தின் செயலாளர் துரை கபிலன் மற்றும் சி. கலைவாணன், எ. சுரேஷ், மு.ப. நடராஜன், எஸ். ரவிச்சந்திரன் முன்னிலை வகிக்கின்றனர் வட்ட கழகத்தின் நிர்வாகிகள் எம். மதிவாணன், கோ. அரிவேல், மு. சதீஷ் க. துரைராஜ், ஜெ. புவனேஸ்வரி ஆர், ஏழுமலை ஆகியோர் வரவேற்புரை ஆற்ற உள்ளனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சுப்ரமணியன், தென் சென்னை நாடாளு மன்ற உறுப்பினர் முனைவர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் வேளச்சேரி தொகுதி மேற்பார்வையாளர் பாலவாக்கம் தா.விஸ்வநாதன் எம்சி, ஆர். பாலசுந்தரம் அடையார் பி.ஜே. பாஸ்கர், எம். விநாயகமூர்த்தி, அடையார் சி. சுரேஷ், சி. பரிமேலழகன் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளனர்.

இறுதியாக த.சந்திரமௌலி, ஏ.சிங்காரவேல், பா.ராஜேஷ், த. துரை, து. சந்திரசேகர், இ.கஜேந்திரன், எம்.கலைவாணன் நன்றி உரையாற்ற உள்ளனர்.

எனவே இந்த கூட்டத்திற்கு தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மன்ற செயலாளர் இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கழக செயல் வீரர்கள் அனைவரும் திரளாக கலந்து கொள்ளுமாறு வட்ட கழக செயலாளர் மு. தனசேகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



கும்முடிப்பூண்டி மேற்கு ஒன்றியம், பொன்னேரி முதல் கும்மடிப்பூண்டி வழியாக அப்பய்யபாளையம் (தடம் T42A) பேருந்து இயங்கி கொண்டு இருந்தது கடந்த 10 ஆண்டுகளாக நிறுத்தப்பட்ட பேருந்தை மக்களின் நீண்ட நாள் கோரிக்கை ஏற்று மாவட்ட செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. கொடியசைத்து துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் மு.மணிபாலன், எம்.எஸ்.ரவி, எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகரன், மு.பாஸ்கரன், கே.ஆறுமுகம். இரா.அறிவழகன், டி.மணி, அப்பய்யாபாளையம்.பிரகாஷ், எஸ்.ராமஜெயம், பி.முத்து, பா. முத்துசாமி, ஏ.மனோகரன், டி.மஸ்தன், பா.பரத்குமார் திருஞானம், தனசேகர், அப்பாஸ், க.பரத்குமார், அங்கமுத்து, கே.வி.நாகராஜ். கே.சி.ராஜா, எஸ்.கஜேந்திரன், ராஜேந்திரன், குமார், ஏழுமலை, எம்.முனிவேல், முகிலன், பார்த்திபன், வாசு, போக்குவரத்து துறை அதிகாரிகள் நெடுஞ்செழியன், வெங்கடேசன், சுரேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### இராணிப்பேட்டை மாவட்டத்தில்

# சுகாதார நிலையங்கள் அமைக்க-சன் டி.வி. ரூ.2.93 கோடி நிதிஉதவி!

## அமைச்சர் ஆர்.காந்தி – மாவட்ட ஆட்சியர் சந்திரகலாவிடம் காவேரி கலாநிதிமாறன் வழங்கினார்!

இராணிப்பேட்டை, செப்.6-

ராணிப்பேட்டை மாவட்டத்தில் துணை சுகாதார நிலையங்கள், கல்வி அலுவலகம், அங்கன்வாடி மையங்கள் அமைக்க மேலும் 2 கோடியே 93 லட்சம் ரூபாய் நிதி உதவியை சன் டி.வி. வழங்கியுள்ளது.

முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் நினைவாக, ஏழை எளியோரின் கல்வி, மருத்துவச் சிகிச்சை, சமூக மேம்பாடு உள்ளிட்ட நலத் திட்டங்களுக்காக சன் பவுண்டேஷன் மற்றும் சன் டி.வி. பல்வேறு அமைப்புகளுக்கு தொடர்ந்து நிதி உதவி அளித்து வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா ஒன்றியத்தில் 19 துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2 கோடியே 22 லட்சம் ரூபாய் நிதிக்கான காசோலையை ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியரிடம் சன் டி.வி. சார்பில் சன் டி.வி. குழுமத்தின் நிர்வாக இயக்குநர் காவேரி கலாநிதி மாறன் வழங்கினார்.

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 6 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்ட இந்த துணை சுகாதார நிலையங்களுக்கான பொதுமக்களின் பங்களிப்பான மூன்றில் ஒரு பங்குதொகையை சன் டி.வி. அளித்தது. இந்த 19 துணை சுகாதார நிலையங்களின் கட்டுமான பணிகள் நிறைவடைந்து, கடந்த பிப்ரவரி மாதம் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு திறக்கப்பட்டன. இந்நிலையில், ராணிப்பேட்டை மாவட்டத்தில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ், மேலும் பல்வேறு பணிகளை மேற்கொள்ள சன் டி.வி. குழுமம் சார்பில் 2 கோடியே 93 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்பட்டது. இதற்கான காசோலையை தமிழ்நாடு கைத்தறி துறை அமைச்சர் காந்தி மற்றும் ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் சந்திரகலாவிடம் சன் டி.வி. குழுமத்தின் நிர்வாக இயக்குநர் காவேரி கலாநிதி மாறன் நேற்று முன்தினம் வழங்கினார்.

ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா, அம்மூர் பகுதியில் 11 துணை சுகாதார நிலையங்கள், வாலாஜாவில் கல்வி அலுவலகம், அம்மூர் பகுதியில் 2 அங்கன்வாடி மையங்கள் மற்றும் 14 சுகாதார மையங்களுக்கான சுற்றுச் சுவர்களை அமைக்க இந்த நிதி பயன்படுத்தப்பட உள்ளதாக கூறிய மாவட்ட ஆட்சியர், ஏழை குழந்தைகள், பொதுமக்கள் நலனுக்காக சன் டி.வி. மேற்கொண்டுள்ள பணிகளை பாராட்டினார்.

ஏழை எளியோருக்கு கல்வி, அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் கற்றல் சூழலை மேம்படுத்துதல், தரமான இலவச சிகிச்சை, மகளிர் மற்றும் இளைஞர் நலன், கிராமப்புற மேம்பாடு உள்ளிட்ட நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக சன் டி.வி.யும் சன் பவுண்டேஷனும் தொடர்ந்து நிதி உதவி அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி 152வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் ஜெ. பாஸ்கர் தலைமையில், ச.பாரதி அண்ணா வேலன் எம்.சி. முன்னிலையில் பகுதிச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., பாலவாக்கம் மு.மனோகரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.